**16.07.2025**

**O.S.No.105/2011**

**பி.வா.சா.1: இளங்கோ**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) தற்போது ஒப்படைத்துள்ள பாகபத்திரம் பி.வா.சா.ஆ.5ல் 1,2 பிரதிவாதிகளுக்கு இடையே மட்டும் தான் பாகப்பிரிவினை மேற்கொள்ளப்பட்டுள்ளது அதில் நடேசனின் மனைவி நல்லத்தங்காள் எனது சகோதரி வாதி பரமேஸ்வரி ஆகியோர் தரப்பினராக இல்லை. ஏற்கனவே நல்லத்தங்காள் வாதி பரமேஸ்வரி ஆகியோர் விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார். அந்த விடுதலை பத்திரத்தை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. ஒப்படைத்துள்ளேன். அது பதிவு செய்யப்பட்ட விடுதலை பத்திரம் என்றால் சரிதான்.

2) நான் ஒப்படைத்துள்ள உறுதி மொழி ஆவணத்தில் பி.வா.சா.7 பத்திரம் வாதி பரமேஸ்வரி எழுதி கையெழுத்து போட்டுக்கொடுத்தது அல்ல என்றும் மேற்படி பத்திரத்தை நான் தயார் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல. அவர்களாகத்தான் எழுதி கொடுத்தார்கள். நான் ஏற்கனவே ஒப்படைத்துள்ள ஆவணத்தில் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டதாகவும் தற்போது போட்டுள்ள ஆவணத்தில் தமிழில் கையெழுத்து போட்டுள்ளதாகவும் ஆவணத்தை ஒப்படைத்துள்ளேன் என்றால் அவர் மாற்றி மாற்றி கையெழுத்து போடுவார். சாட்சி முதலில் பரமேஸ்வரிரமேஷ் என்று பாஸ்போர்ட்டிலும் கையெழுத்து போட்டுள்ளார் பின்னிடடு தற்போது கவுண்டர் பரமேஸ்வரி என்று விசாவிலும் கையெழுத்து போடுவதாகவும் தெரிவிக்கிறார்.

3) மேற்படி நான் சொல்லும் பாஸ்போர்ட் விசாவை ஒப்படைத்து அதன்படி நான் சாட்சியம் அளிக்கவில்லை. வாதி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளார். நான் சாட்சி வாக்கு மூலத்தில் பரமேஸ்வரி மாற்றி மாற்றி கையெழுத்து போடுவார் என்று சொல்லவில்லை. இந்த பாகப்பத்திர விடுதலை பத்திரம் பி.வா.சா.ஆ.1யை நான் வழக்கிற்காக உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த பி.வா.சா.ஆ.1 மற்றும் 7 விடுதலை பத்திரங்கள் செல்லத்தக்கது

அல்ல என்றும் அதில் உள்ள கையெழுத்துக்கள் பரமேஸ்வரி உடையது அல்ல என்றும் அது இந்த வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.

4) பரமேஸ்வரி தான் கையெழுத்து போட்டு கொடுத்துள்ளார். என் அப்பா இறந்ததில் இருந்து பரமேஸ்வரிக்கு திருமணம் செய்து கொடுத்தது வரை நான் தான் அனைத்து செலவுகளையும் செய்து வந்துள்ளேன். கடனை கட்டியுள்ளேன். அவ்வாறு செலவு செய்ததற்கு எவ்வித ஆவணங்களையும் நான் தாக்கல் செய்யவில்லை. நான் வாதியை படிக்க வைக்கவும் இல்லை, திருமணம் செய்து கொடுக்கவும் இல்லை செலவு செய்யவும் இல்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு வழக்கிற்காக அவ்வாறு பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்கு சட்டப்படி 1/4 பாக பாகம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. வாதியின் பாகத்தை ஏமாற்றுவதற்காக நான் செய்த கிரயப்பத்திரங்கள் வாதியின் பாகத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும் சரியல்ல. குடும்ப கடன்கள் அனைத்தையும் நான் தான் கட்டினேன் என்று பிரதிவாதி சொல்கிறார். என்னுடைய வழக்குரையில் எவ்வளவு குடும்ப கடன் இருந்தது என்பதையோ யாரிடம் இருந்தது என்பதையோ எப்போது தீர்க்கப்பட்டது என்பதையோ என்னுடைய சாட்சி வாக்குமூலத்தில் சொல்லவில்லை.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S
Digitally signed by GANESAN S
Date: 2025.07.16 18:04:58 +0530

**Subordinate Judge, Attur.**